**இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவைம் - 2023**

---------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டம் என்பவற்றுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பேரவையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றல் மற்றும் அதன் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது பேரவையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு பேரவை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு வீச்சு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பேரவைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க

ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பேரவையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள்இ நடைமுறைகள்இ புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பேரவையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பேரவை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீது கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு தொடர்பான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 (இ.பொ.து.க.நி 01) இன் 27 ஆம் பந்திக்கு முரணாக பேரவையின் புத்தகங்களில் பதிவு செய்யாமல் ரூபா 7.36 மில்லியன் பெறுமதியுடைய கண்காட்சிப் | சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்வதற்கு முன்பாக முறையாக கணக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலே உள்ள பண்டங்கள் கண்காட்சி பொருட்களாக தனித்தனி நிலையான சொத்து பதிவேடுகளில் பூச்சிய மீதியுடன் பராமரிக்கப்படுகின்றதுடன், அந்த பொருட்கள் தொடர்பாக வருடாந்த | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொருளினை மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 (இ.பொ.து.க.நி 07) இன் 11 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் வெளிப்படுத்தப்படவில்லை. | இருப்பு கணக்கெடுப்பும் மேற்கொள்ளப்பட்டது. மேலும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 இன் பிரகாரம் இந்த பண்டங்கள் தொடர்பாக எவ்வித வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பான குறிப்பில் இந்த கண்காட்சிகள் பூச்சிய மீதியுடன் பதிவு செய்யப்பட்டுள்ளதால் தனியாக வெளிப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று ஓழுங்குபடுத்துதல் பேரவை கருதுகிறது. | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 02 (இ.பொ.து.க.நி 02) இன் 22 ஆம் பந்திக்கு முரணாக மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 7 மில்லியன் பெறுமதியுடைய மூலதன மானியங்கள் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து பெற்ற காசுப்பாய்ச்சல்களாக வெளிப்படுத்தப்படாமல் முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்களாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டின் போது ஒழுங்குபடுத்துதல் பேரவைக்கு மூலதன பண்டங்களினை கையகப்படுத்துவதற்காக ரூபா 7 மில்லியன் மூலதன நிதி பெறப்பட்டது. ஆகையினால், முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டுவது சரியாகும் என்று பணிவுடன் குறிப்பிடப்படுகிறது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பணியாளர் நலன்கள் தொடர்பான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 19 (இ.பொ.து.க.நி 19) இன் 76 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக இளைப்பாறல் நல பொறுப்புக்களின் பெறுமதியினை பேரவையானது கணிப்பிடப்படவில்லை. மேலும், நியமத்தின் 141 ஆம் பந்தியின் பிரகாரம் பொருத்தமான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படவில்லை. | அடுத்து வரும் கணக்கீட்டு வருடத்தில் பொருத்தமான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஆதனம், பொறி மற்றும் உபகரணத்துடன் தொடர்புடைய இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 இன் 14(அ) ஆம் பந்தியின் பிரகாரம் எதிர்வுகூறக்கூடிய எதிர்கால நன்மைகளின் உட்பாய்ச்சலுடன் கூடிய சொத்துக்கள் அல்லது நிறுவனத்திற்கு சாத்தியமான | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட படி திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். . | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

சேவையுடன் தொடர்புடைய சொத்துக்கள் மாத்திரமே நிதியல்லாத சொத்துக்களின் கீழ் ஆதனம், பொறி மற்றும் உபகரணமாக இனங்காணப்பட வேண்டுமாயினும், அவ்வகையான சாத்தியங்களின்றி அலுவலக உபகரணமாக ரூபா 111,003 பெறுமதியுடைய 66 உபகரணங்களும் மின் உபகரணமாக ரூபா 26,000 பெறுமதியுடைய 19 உபகரணங்களும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒழுங்குபடுத்தல் பேரவை உருவாக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டில் ஒழுங்குபடுத்தல் பேரவையின் முன்னோடியாக இருந்த அணுசக்தி அதிகாரசபையிடம் இருந்து பெறப்பட்ட தேறிய நிலையான சொத்துக்கள் ரூபா 14.04 மில்லியனுடன் தொடர்புடைய 2015 முதல் 2020 வரையிலான ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 14.04 மில்லியனை தொடர்புடைய ஆண்டுகளில் ஒழுங்குபடுத்தல் பேரவையின் வருமானத்திற்கு எதிராக இனங்காணப்படவில்லை என்பதுடன் அணுசக்தி அதிகார சபையிடம் இருந்து பெறப்பட்ட திரட்டிய நிதிக்கு எதிராக கழிக்கப்பட்டு அதன் விளைவாக அதிகார சபையின் திரட்டிய நிதி ரூபா 3.8 மில்லியன் எதிர்மறை பெறுமதியை பெற்றது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். 2024 ஆம் ஆண்டினுடைய இறுதிக் கணக்கில் இந்த தவறு திருத்தப்படும் என்பதனை பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். | அதிகார சபையின் திரட்டிய நிதியினை சீராக்கம் செய்வதன் மூலம் எதிர்மறை மீதி திருத்தப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1999 இன் 1 ஆம் இலக்க அணுசக்தி பாதுகாப்பு பிரமாணங்களின் அயனியாக்கும் கதிர்வீச்சு | | | |

| | | | |
|---|---|---|---|
| பாதுகாப்பு பற்றிய பிரமாணங்கள் | | | |
| (ை) 4 (1) (அ) ஆம் பிரமாணம் | கதிரியக்க மூலப்பொருட்களினை வைத்திருப்பதற்கான (ிழளளநளளழைெ) அனுமதிப்பத்திரங்களினை பேரவை மூலம் வழங்க வேண்டிய போதிலும், 2019 ஆம் ஆண்டில் பொலிஸ் தலைமையகத்தினால் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 50 எக்ஸ்-ரே உபகரணங்கள் தொடர்பில் 2020 திசெம்பர் 31 வரையில் 50 உபகரணத்திற்காகவும், 2021-2023 ஆண்டு வரையில் 35 உபகரணங்களுக்காகவும், 2024-2026 வருடங்களில் 34 உபகரணங்களுக்காகவும், 2019-2021 வரையில் 2019 இல் தனியார் கம்பனியினால் இறக்குமதி செய்யப்பட்ட 16 எக்ஸ்-ரே உபகரணங்களுக்காகவும் வைத்திருப்பதற்கு தேவையான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை. ஆகையினால், அனுமதிப்பத்திர கட்டணமாக அறவிடவேண்டிய ரூபா 1.38 மில்லியன் சேகரிக்கப்படவில்லை. மேலும், பிரமாணங்களின் படி கதிர்வீச்சு உபகரணத்தினை இடைநிறுத்துவதற்கும் அகற்றுவதற்கும் பேரவையின் அனுமதி வழங்க வேண்டும் என்பதனால் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் அனுமதிப்பத்திர கோப்புகள் மூடப்பட்ட 27 எகஸ்-ரே உபகரணங்களுக்கு அகற்றுவதற்கான விண்ணப்பங்கள் கிடைக்கும் வரை அவைகளை வைத்திருப்பதற்கான | இயந்திரத்தினை நிறுவிய பிறகும் கதிர்வீச்சு பாதுகாப்பினை உறுதிசெய்வதற்காக வசதியின் கதிர்வீச்சு சோதனையின் பிறகும் எக்ஸ்-ரே வசதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். எனவே, இயந்திரம் நிறுவப்பட்டிருக்க வேண்டும் என்பதோடு இயங்கக்கூடிய நிலையிலும் இருக்க வேண்டும். பொதிகளினால் அடைக்கப்பட்ட அல்லது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள எக்ஸ்-ரே இயந்திரங்களுக்கு ஒழுங்குபடுத்தல் பேரவையினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படாது. ஆகையினால், நிலுவுகின்ற நடைமுறையின் கீழ் தொடர்புடைய பணத்தினை அறவீடு செய்வது சாத்தியமில்லாதது ஆகும். எனினும், கணக்காய்வு அவதானிப்பின் பிரகாரம் உடைமை அனுமதிப்பத்திரங்களினை வழங்குதல் செயற்பாடு தொடர்பாக மேலும் விசாரணை செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மூடப்பட்ட மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட கோப்புகளில் உள்ள எக்ஸ்-ரேயினை தொடர்ந்து பயன்படுத்துவதற்கு பின்பற்றக்கூடிய நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்படும். | உரிமக் கோப்புகள் மூடப்பட்ட எக்ஸ்-ரே உபகரணங்களின் அகற்றலுக்காக பாதுகாப்பானதும் ஒழுங்கானதுமான நடைமுறை உருவாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை. | | |
| (தை) 4 (1) (ஆ) ஆம் பிரமாணம் | பொதுமக்கள் அல்லது ஊழியர்களுக்கு குறிப்பிடத்தக்களவு வெளிப்பாடுகளினை வெளிப்படுத்தக்கூடிய கதிர்வீச்சின் இயற்கை மூலங்களுடன் தொடர்புடைய நடவடிககைகளுக்காக அனுமதிபத்திரங்களினை பேரவை வழங்கினாலும், கதிரியக்க கனிய மணல் தொழில்துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் அகழ்தல், செயற்படுத்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் கனிய வைப்புக்களின் விற்பனை போன்ற நடவடிக்கைகளுக்காக அனுமதிபத்திரங்கள் வழங்கப்படவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டதன் பிரகாரம் பொருத்தமான இடங்களுக்கு அனுமதிப்பத்திரங்களினை வழங்குவதற்காக சாத்தியப்பாடுகளினை ஒழுங்குபடுத்தல் பேரவை கண்டறிந்து அதற்கேற்ப அவசியமான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்ய எதிர்பார்க்கின்றது. | பிரமாணங்களின் பிரகாரம் நவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (தை) 22 (இ), 27 (ஸ) (ஓ) ரூ 34 (ஈ) ஆம் பிரமாணங்கள் | நிரந்தரமற்ற ஊழியர்களாக அல்லாத ஊழியர்கள் அல்லது முன்னைய தொழிலில் இருந்து தொழில் ரீதியான வெளிப்படுதலுடன் உள்ள தொழிலாளர்களை பணிக்கமர்த்துவதற்கான முன்நிபந்தனையாக இந்த விதிமுறைகளின் பிரகாரம் தற்காப்பு மற்றும் பாதுகாப்பினை வழங்குவதற்கு அவசியமாக இருக்கக்கூடிய அத்தகைய ஊழியர்களின் முன்னைய தொழில் ரீதியான வெளிப்படுத்தல் வரலாறு மற்றும் அத்தகைய ஊழியர்களின் சுகாதார பதிவுகளினை உள்ளடக்கிய தகவல் பெறப்படுவதோடு, பாதுகாப்பு மற்றும் காவலினை வழங்குவதற்காக கதிர்வீச்சு ஊழியர்களின் சுகாதார பதிவுகள், கதிர்வீச்சு | கணக்காய்வு செய்யப்பட்ட உரிமம் பெற்ற நிறுவனங்கள் நடுத்தர இடர் வசதிகளுடையாகும். (ஆநனரைஅ சுளைம குயஉடைவைல). அதாவது, அந்த வசதிகள் தொடர்பாக பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள் மற்றும் தகவல்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதன் மூலமும் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் அதனை பூர்த்தி செய்வதன் அடிப்படையிலும் ஒழுங்குபடுத்தல் பேரவை அனுமதிப்பத்திரங்களினை புதுப்பிக்கும். | பிரமாணங்களின் பிரகாரம் நவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி மற்றும் ஆலோசனை தொடர்பான பதிவுகள் என்வற்றை ஒவ்வொரு கதிர்வீச்சு தற்காப்பு ஊழியரும் கட்டாயமாக பராமரிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டில் கணக்காய்வு செய்யப்பட்ட 05 அனுமதிப்பத்திரம் பெற்ற நிறுவனங்கள் அதற்கேற்ப செயற்படவில்லை. எனினும், இதனை கவனத்திற் கொள்ளாமல் பேரவை அனுமதிப்பத்திரங்களினை புதுப்பித்துள்ளது. | | |
| (ஐ) 27 (ஈ) (ஐ) ஆம் பிரமாணம் | உரிமம் பெற்ற நிறுவனங்கள் அனைத்து கதிர்வீச்சு ஊழியர்களுக்கும் தனிப்பட்ட கண்காணிப்பு கருவிகளினை வழங்க வேண்டுமாயினும், கள சோதனை செய்யப்பட்ட நான்கு நிறுவனங்கள் அவர்களுடைய கதிர்வீச்சு ஊழியர்களுக்காக தனிப்பட்ட கண்காணிப்பு கருவிகளினை வழங்கியிருக்கவில்லை. இதனை கவனத்திற் கொள்ளாமல் பேரவையானது அனுமதிப் பத்திரங்களினை புதுப்பித்துள்ளது. | இது தொடர்பாக உரிமம் பெற்றவர்களுக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டு பரீட்சிப்பின் போது ஆராயப்படுகிறது. எனினும், கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்ட படி கள சோதனையிடப்பட்ட நிறுவனங்களுக்கான தனிப்பட்ட கண்காணிப்பு கருவிகளினை பெற்றுக்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பிரமாணங்களின் பிரகாரம் நவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (எ) 37 (உ) ஆம் பிரமாணம | ஒவ்வொரு கதிர்வீச்சு கருவிகளிலும் கதிர்வீச்சு எச்சரிக்கை குறியீடு அல்லது எச்சரிக்கை சமிக்கை காட்சிப்படுத்தப்பட வேண்டுமாயினும் கள பரீட்சிப்பின் போது மாதிரி சோதனையிடப்பட்ட நிறுவனங்கள் அத்தகைய சமிக்கைகளினை காட்சிப்படுத்தப்படவில்லை என்பதுடன், அனுமதி பத்திர நிபந்தனைகளின் பிரகாரம் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரத்தினை நிறுவன வளாகத்தினுள் காட்சிப்படுத்தப்படவில்லை. | அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்கும் நேரத்தில் குறியீடு காட்சிப்படுத்தப்படாவிட்டால் இது காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகிறது. எதிர்காலத்தில் அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிக்கும் போது மேற்கூறிய கதிர்வீச்சு எச்சரிக்கை குறியீட்டினை காட்சிப்படுத்தல் தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்துவதற்கு ஒழுங்குபடுத்தல் பேரவை எதிர்பார்க்கின்றது. | பிரமாணங்களின் பிரகாரம் நவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2021 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01.∴.2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 9(ஆ) ஆம் பிரிவு | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது 04 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக நிமித்த உப கட்டுநிதியாக மொத்தம் ரூபா 797,000 செலுத்தப்பட்டுள்ளது. | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒரு நேரத்தில் அதிகபட்சம் ரூபா 100,000 வரையான இடைக்கால முற்பணம் மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்பதோடு அந்த தொகையினை விஞ்சும் சந்தர்ப்பத்தில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் ஊடாக பொதுத் திறைசேரியின் முன் அங்கீகாரத்தினை கணக்கீட்டு உத்தியோகத்தர் பெற வேண்டும். எனினும், ஒரு வேலைக்காக பல நாட்களில் முற்பண பணத்தினை பெற முடியாது என்று குறிப்பிடவில்லை. நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர் ஒரு நேரத்தில் ரூபா 100,000 மற்றும் ரூபா 100,000 தொகைக்கும் குறைவாக விண்ணப்பித்தமையினால் 01.∴.2020 ஆம் பொது நிதி சுற்றறிக்கையின் 09(ஆ) இற்கு அமைவாக அந்த தொகை விடுவிக்கப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 29.7 மில்லயன் மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 8.9 மில்லியன் ஆகும். ஆகையினால், நிதி விளைவுகளில் ரூபா 20.8 மில்லியன் தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. மீண்டெழும் அரச மானியங்களாக ரூபா 41 மில்லியன் தொகை கிடைத்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான செலவு விடயங்களின் விலகல் பகுப்பாய்வு

| நிதிக்கூற்று விடயம் | 2023 | 2022 | விலகல் | விலகல் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | % |
| அனுமதிப்பத்திர கட்டண வருமானம் | 19.4 | 18.2 | 1.2 | 6.6 |
| ஏற்றுமதி மற்றும் இறக்குமதி அங்கீகரித்தல் கட்டணம் | 5.09 | 4.63 | 0.46 | 9.9 |
| பயிற்சிக் கற்கைநெறி கட்டண வருமானம் | 2.42 | 1.15 | 1.27 | 110 |

| | | | | |
|---|---|---|---|---|
| அறைத் திட்ட அங்கீகரித்தல் கட்டணம் | 1.03 | 0.97 | 0.06 | 6.2 |
| சம்பள செலவீடுகள் | 20.4 | 24.13 | 3.73 | 15.4 |
| எரிபொருள் கிரயங்கள் | 2.25 | 1.21 | 1.04 | 86 |
| சொத்து முகாமைத்துவ கிரயங்கள் | 4.48 | 3.11 | 1.37 | 44 |
| மொத்த சொத்துக்கள் | 162 | 119.3 | 42.7 | 35.7 |
| மொத்த உரிமை | 128.2 | 86.7 | 41.5 | 47.8 |

**2.3 விகிதப் பகுப்பாய்வுகள்**

| **விகிதம்** | **2023** | **2022** | **2021** | **2020** | **2019** |
|---|---|---|---|---|---|
| நடைமுறைச் சொத்துக்கள விகிதம் | 1.08 | 0.69 | 1.43 | 0.62 | 1.26 |
| மொத்த சொத்துக்கள் மீதான வருவாய் விகிதம் | 18.3% | 7.45% | 11.2% | (5.82%) | (11.56%) |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ நடவடிக்கைகள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2014 இன் 14 ஆம் இலக்க அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் 12(உ), 59(2) மற்றும் 60 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அணு ஆயுதங்கள் பெருகுவதை தடைசெய்தற்கு இலங்கையினால் கைச்சாத்திடப்பட்ட மாநாட்டின் கீழ் மேலதிக நெறிமுறையினை முறையாக செல்லுபடியாக்குவதற்குரிய நியதி விடயங்கள் பூர்த்தி செய்யப்படும் வரை இலங்கையில் வரைவு மேலதிக நெறிமுறையினை (யனனவைவழையெட ிசழவழஉழட) நிபந்தனைக்கு உட்பட்டு அமுல்படுத்துதற்கு 2018 ஏப்ரல் 03 ஆம் திகதிய 18.˙.0522.˙.727.˙.013 இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை தேவையான நியதி தேவைப்பாடுகளினை பேரவை பூர்த்திசெய்யவில்லை. மேலும், மேற்படி மாநாட்டின் 39 ஆவது உறுப்புரையிலுள்ள பொறுப்புக்களினை ஆக்கபூர்வமாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு தொடர்புடைய ஏற்பாடுகளினை இலங்கை விரிவாக தயாரிக்கவேண்டுமாயினும் 2019 ஆம் | மேலதிக நெறிமுறையில் கையெழுத்திடுவதற்கு 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தில் திருத்தம்செய்தல் அவசியமாகும். ஒழுங்குபடுத்துதல் பேரவை புதிதாக நியமிக்கப்பட்ட சட்ட உத்தியோகத்தரினை தொடர்பு கொண்டதுடன் இந்த மேலதிக நெறிமுறையினை கையெழுத்திட ஏனைய அக்கரையுடைய தரப்பினர்களுடன் ஒருங்கிணைத்து வருகிறது. அத்துடன், இலங்கையின் மின்சார உற்பத்தியில் அணுசக்தியை பயன்படுத்துவதற்கு தேவையானதொரு புதிய சட்டத்தினை தயாரிப்பதற்கு கௌரவ நீதி அமைச்சரினால் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. | இலங்கையினால் கையெழுத்திட்டுள்ள சர்வதேச உடன்படிக்கையின் கீழ் பொறுப்புக்களினை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் நிறைவேற்றுவதனை நிச்சயித்துக்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டிற்கு பிற்பாடு இது தொடர்பாக பேரவை ஈடுபடவில்லை. | | |
| (ஆ) | அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் அணுசக்தி சபை உட்பட சகல நபர்களினாலும் மேற்கொள்ளப்படும் அயனியாக்கும் கதிர்வீச்சு தொடர்பான அனைத்து நடைமுறைகளுக்கும் (ரீசயஉவைைநள) அனுமதிப்பத்திரம் வழங்குவதும் ஒழுங்குபடுத்துவதும் பேரவையின் பொறுப்பாகும். அதற்கேற்ப சபையினால் வழங்கப்படுகின்ற கதிர்வீச்சு மட்டங்களின் மதிப்பீடு, கதிர்வீச்சு அளவீட்டு உபகரண அளவுறுத்திருத்த சேவை, தனிப்பட்ட கண்காணிப்ப சேவை மற்றும் தள மேற்பார்வை சேவைகள் போன்றவற்றை மேற்பார்வையிடவும் ஒழுங்குபடுத்தவும் அதிகாரச்சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் அதிகாரங்களின் பிரகாரம் பேரவையானது நடைமுறைகள் மற்றும் பொறிமுறைகளினை உருவாக்க வேண்டுமாயினும் அத்தகைய நடைமுறைகள் மற்றும் பொறிமுறைகளினை பேரவை தயாரிக்கவில்லலை. | இயக்குனர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அதிகாரச்சட்டத்திற்கு அமைய தயாரிக்கப்பட வேண்டிய பல்வகையான விதிகள், கொள்கைகள் மற்றும் பிரமாணங்கள் என்பவைகளினை கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் பொறிமுறைகளினை உள்ளடக்கி வரைவுபடுத்தப்பட்டு வருகிறது. இந்த விதிகள் மற்றும் பிரமாணங்களினை தயாரித்த பிற்பாடு அதிகாரச்சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட வேண்டிய ஏனைய விதிகள், பிரமாணங்கள், விதிமுறைகள் என்பவற்றினை தயாரிப்பதற்கு இயக்குனர் சபையின் அங்கீகாரம் நாடப்படும். வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான ஊழியர்களைக் கொண்டு நாளாந்த பணிகளின் போது இந்த பிரமாணங்கள் மற்றும் விதிகளினை தயாரிப்பது ஒழுங்குபடுத்துதல் பேரவைக்கு ஒரு பெரிய சவாலாகும். | அதிகாரச்சட்டத்திற்கு ஏற்ப அயனியாக்கும் கதிர்வீச்சு தொடர்பான சகல நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்தக்கூடிய வாறு தேவையான பொறிமுறை உடனடியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | அதிகாரச்சட்டத்தின் 46 ஆம் பிரிவின் பிரகாரம் உரிமைகோரப்படாத கதிர்வீச்சு மூலங்களினை உடனடியாக பெறுவதற்கு அல்லது கட்டுப்பாட்டினை மீண்டும் பெறுவதற்கு ஒரு தேசிய தந்திரோபாயம் உருவாக்கப்பட வேண்டுமாயினும் அத்தகைய தேசிய தந்திரோபாயம் உருவாக்கப்படவில்லை. . | இயக்குனர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அதிகாரச் சட்டத்திற்கு ஏற்ப முதன்மையாக தயாரிக்கப்பட வேண்டிய பல்வேறு விதிகள், கொள்கைகள் மற்றும் பிரமாணங்களுடன் இந்த தந்திரோபாயம் தயாரிக்கப்பட்டு வருவதுடன், வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான ஊழியர்களைக் கொண்டு நாளாந்த பணிகளின் போது இந்த பிரமாணங்கள் மற்றும் விதிகளினை தயாரிப்பது ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு ஒரு பெரிய சவாலாகும். | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அதிகாரச்சட்டத்தின் 48 (2) (அ) ஆம் பிரிவின் பிரகாரம் கதிரியக்க மூலங்களினை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதியினை வழங்குவதற்காக சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் பின்பற்ற வேண்டிய தேவைப்பாடுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான விதிகள் தயாரிக்கப்பட்டு 87 (3) ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்தின் அனுமதியை பெற 2024 மார்ச் வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | கதிரியக்க மூலப்பொருட்களை கவனமாக கொண்டு செல்வது தொடர்பான விதியின் இறுதி வரைவு 2024.04.30 இல் இடம்பெற்ற கூட்டத்தில் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட அக்கரையுடைய தரப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் அறிவுரைகளின் அடிப்படையில் தயாரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் வரைவானது சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் நிபுணர்களின் மீளாய்விற்கு பின்னர் பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்று விதியாக இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அதிகாரச்சட்டத்தின் 49 ஆம் பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அணுசக்தி பொருட்கள், உபகரணம் மற்றும் தொழில்நுட்பங்களின் பட்டியலானது இலங்கையின் சர்வதேச கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கு இணங்க தயாரிக்கப்பட வேண்டும் என்பதோடு அந்த பட்டியல் தொடர்பாக போதுமான பிரசித்தம் கொடுக்கப்பட்டு பேரவை தீர்மானிக்கின்ற வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமாயினும் அதற்கேற்ப செயற்படவில்லை. | அதிகாரச்சட்டத்தின் 49 ஆம் பிரிவின் பிரகாரம் அணுசக்தி மூலப்பொருட்கள், உபகரணம் மற்றும் தொழில்நுட்பங்கள் என்பன கட்டுப்படுத்தப்பட்ட உருப்படிகள் ஆகும் என்பதோடு அவைகள் மேலதிக நெறிமுறையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவையாகும். இலங்கை இதுவரை மேலதிக நெறிமுறையில் கையெழுத்துடவில்லை. இந்த மேலதிக நெறிமுறையில் கையெழுத்திட்ட பின்னர் மாத்திரமே இந்த பட்டியலினை தயாரிக்க முடியும். | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | அதிகாரச்சட்டத்தின் 69(1) ஆம் பிரிவின் படி கதிரியக்க மூலப்பொருளினை உருவாக்கும் அகழ்வு மற்றும் தொழிற்பாட்டு செயன்முறையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சகல நபர்களும் பேரவையினால் விதிக்கப்பட்ட விதிகளின் படி தொழிலாளர்கள், பொதுமக்கள் சூழலினை பாதுகாப்பதற்காக உருவாக்கப்படும் தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும் என்பதோடு 69(2) ஆம் பிரிவின் பிரகாரம் இணங்காதவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். எனினும், 2024 மார்ச் வரையிலும் தேவையான விதிகளினை பேரவை தயாரிக்கவில்லை. | இந்த விதியினை வரைவதற்கு இரண்டு பிரதி இயக்குனர்களினைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் பூர்வாங்க வரைவினை தயாரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வரைவினை இறுதி செய்த பின்னர் புவியியல் கணக்கெடுப்பு மற்றும் சுரங்கப் பணியகத்திடம் இருந்து கருத்துக்கள் மற்றும் ஆலோசனையினை பெற்று, மிக விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கு | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஒழுங்குபடுத்தல் பேரவை எதிர்பார்க்கின்றது. | |
| (ஊ) | அதிகாரச்சட்டத்தின் 86 (2) ஆம் பிரிவின் பிரகாரம் கதிர்வீச்சு தொழில்துறை நிறுவனங்களினை செயலிழக்கச் செய்வதற்கும், தீங்குவிளைவிக்கக்கூடிய அயனியாக்கும் கதிர்வீச்சினால் ஏற்படும் நோய்கள் மற்றும் நட்டங்களுக்காக கதிர்வீச்சு பணியாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான இழப்பீட்டு திட்டமொன்றினை உருவாக்குவதற்கும் கட்டளைகளினை அமைச்சர் தயாரிக்கவில்லை. | 86 (2) ஆம் பிரிவின் பிரகாரம் கதிர்வீச்சு தொழிற்துறை நிறுவனங்களினை செயலிழக்கச் செய்வதற்கான கட்டளைகள் ஏற்கனவே வரைவு செய்யப்பட்டு, இயக்குனர் சபையினால் அங்கீகரிக்கபட்ட கதிர்வீச்சு பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. அக்கரையுடைய தரப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் அறிவுரைகளினை பெற்ற பின்னர் நிர்ணயிக்கப்பட்ட இந்த ஒழுங்குவிதியினை அமுல்படுத்துவதற்கு ஒழுங்குபடுத்துதல் பேரவை எதிர்பார்க்கின்றது. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | அதிகாரச்சட்டத்தின் 87(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் கதிர்வீச்சு பணியாளர்களின் தகைமைக்கான அளவுகோலுக்கான விதிகள் தயாரிக்கப்படவில்லை. | ஏற்கனவே தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டதன் படி அதிகாரச்சட்டத்தின் 87 (1) (ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய கதிர்வீச்சு பணியாளர்களின் தகைமைக்காக அளவுகோல்கள் தொடர்பான விதியுடன் சேர்த்து ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் என்பவற்றினை தயாரிப்பதற்கு இயக்குனர் சபையின் அங்கீகாரம் நாடப்படுகிறது. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரச்சட்டத்தின் 12 (ங) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டில் காணப்படுகின்ற ஏதாவது பண்டங்களினையும் அல்லது வர்த்தக பொருட்களினையும் பரீட்சிக்கவும் (ைளிநஉவ), கதிரியக்கத்தினை சோதிக்கும் நோக்கில் மாதிரிகளினை எடுப்பதற்கும், பேரவை அதனை அவசியமும் பொருத்தமானதும் என கருதும் பட்சத்திலும், பொது மக்கள் மற்றும் சகல அதிகாரிகளுக்கும் தகவலினை வழங்குவதற்காக அத்தகைய சோதனையின் பெறுபேறுகளினை வெளியிடவும் வேண்டும். எனினும், | இந்த பரீட்சிப்புக்கள் அணுசக்தி சபையினால் நடத்தப்படுவதுடன் எழுமாற்று அடிப்படையில் பொருத்தமான பரீட்சிப்புக்களினை பேரவை மேற்கொள்கிறது. அதற்கேற்ப, தெரிவுசெய்யப்பட்ட நான்கு மாவட்டங்களில் இருந்து நுகர்வோர் பால் மாவின் மாதிரிகள் அணுசக்தி சபையினால் எழுமாறாக சோதனை செய்யப்பட்டு அறிக்கைகள் அமைச்சு மற்றும் கணக்காய்வாளர் நாயகத்திற்கும் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சகல ஏனைய அபாயகரமான உணவுகளும் எழுமாறாக சோதனை செய்யப்பட வேண்டும். |

இறக்குமதி செய்யப்பட்ட பால் தவிர கதிர்வீச்சு மூலப்பொருட்களினை கொண்டிருக்கக்கூடிய இறக்குமதி செய்யப்பட்ட நுகர்வுப்பொருட்களினை இனங்காண்பதற்கு எழுமாறான பரிசோதனையாவது (சயனெழஅ உாநஉமள) நடத்தப்படவில்லை.

### 3.3 சர்ச்சைத் தன்மையான பரிவர்த்தனைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அதிகாரச்சட்டத்தின் 30 (2) ஆம் பிரிவின் படி அனுமதிப்பத்திரம் அதன் காலாவதியாகும் திகதிக்கு முன்னர் புதுப்பிப்பதலுக்கான விண்ணப்பத்தினை அனுமதிப்பத்திரம் பெற்றவர் விண்ணப்பிக்கத் தவறினால், கூறப்பட்ட அனுமதிபத்திரத்தின் காலாவதியின் பின்னர் உடனடியாக சம்பந்தப்பட்ட வளாகத்திற்கு முத்திரை (ளநயடநன) வைக்க வேண்டும் என்பதோடு மனித உயிர் மற்றும் சூழலினை பாதுகாப்பதற்காக கதிரியக்க மூலத்தின் பாதுகாப்பு மற்றும் காவல் தொடர்பாக அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு வழிகாட்டுதல்களினை வழங்கவும், முத்திரை வைக்கப்பட்ட 07 நாட்களுக்குள் வளாகத்தில் முத்திரை செய்ததனை உறுதி செய்கின்ற கட்டளையினை பெறுவதற்கும் நீதவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டுமாயினும் அதற்கேற்ப செய்ற்படவில்லை என்பதுடன் 2024 ஜனவரி 01 முதல் 2024 மே 31 வரை சோதனை செய்யப்பட்ட கணக்காய்வின் பிரகாரம் 05 இடங்களுக்காக தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதிகாரச்சட்டத்தின் 28(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பேரவையினால் தற்காலிக அனுமதிப்பத்திரங்களினை வழங்கிமையினால் அதிகாரச்சட்டத்தின் 30(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளினை அமுல்படுத்துவதற்கு தடைசெய்யப்பட்டுள்ளதுடன், அதிகாரச்சட்டத்தின் 86(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுங்குவிதிகளினை அமைச்சர் வழங்கவேண்டிய போதிலும் இயக்குனர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டிகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டது. | அதிகாரச்சட்டத்தின் 30 (2) ஆம் பிரிவின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் பெற்றவர் அனுமதிப்பத்திரத்தின் காலாவதியாகும் திகதிக்கு முன்னர் புதுப்பிப்பதலுக்கான விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கத் தவறினால், அனுமதிப்பத்திரத்தின் காலாவதியின் பின்னர் உடனடியாக ஒழுங்குபடுத்தல் பேரவை சம்பந்தப்பட்ட வளாகத்தினை முத்திரையிடுவதற்கு தொடரலாம் என்ற போதிலும், அதிகாரச்சட்டத்தின் 28(2) ஆம் பிரிவின் பிரகாரம் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க தவறிய போதிலும் அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிப்பதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றவர் விரும்பினால் விண்ணப்பித்ததை சமர்ப்பிப்பதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு பேரவை வழிகாட்ட வேண்டும் என்பதோடு, அனுமதிப்பத்திரத்தின் புதுப்பித்தல் செயற்பாடு முடிக்கப்படும் வரை அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்கப்படலாம். தற்போது நிலையான காலப்பகுதிக்காக குறிப்பிட்டதொரு நடைமுறையின் கீழ் தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதுடன் சகல அனுமதிப்பத்திர கட்டணங்கினை செலுத்திய பின்னர் மாத்திரமே மிகுதி அனுமதிப்பத்திர காலப்பகுதிக்காக அனுமதிப்பத்திரங்கள் நீடிக்கப்படும். மேலும், ஒரு தற்காலிக அனுமதிப்பத்திரத்தின் அனுமதிப்பத்திர காலப்பகுதி மற்றும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் என்பவற்றினை | தற்காலிக அனுமதிப்பத்திரத்தினை வழங்குவது தொடர்பாக ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்படாததால் சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தினை நாடி அதற்கேற்ப செயற்பட வேண்டும். |

இயக்குனர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டியாக உள்ள அங்கீகாரத்திற்கான நடைமுறையில் தெளிவாக ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிறைவேற்று பதவிநிலையில் 06 வெற்றிடங்களும், மூன்றாம் மட்ட பதவிகளில் 04 வெற்றிடங்களும், இரண்டாம் மட்ட பதவிகளில் 05 வெற்றிடங்களும், முதன்மை மட்ட பதவிகளில் 03 வெற்றிடங்களுமாக ஒழுங்குபடுத்தல் பேரவையில் மொத்தமாக 18 வெற்றிடங்கள் காணப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட பதிவியணியின் இது 40 சதவீதம் உயர்வாக இருந்தமையினால், அயனியாக்கும் கதிர்வீச்சின் சாத்தியமான பாதக விளைவுகளில் இருந்து பாதுகாப்பதற்காக வினைத்திறனானதும், விளைதிறனுமான ஒழுங்குபடுத்தல் கட்டளை செயற்பாட்டினை அமுல்படுத்துவதற்கு இது தடையாக இருந்தது. | வெற்றிடங்களினை நிரப்புவதற்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் ஊடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் இருந்து அங்கீகாரத்தினை பெற தோல்வியடைந்தது. ஆனால், 2023 திசெம்பர் இறுதியில் பிரதி இயக்குனர், உள்ளக கணக்காய்வாளர், நிர்வாக உத்தியோகத்தர், 04 முகாமைத்துவ உதவியாளர்கள், 03 விஞ்ஞான உத்தியோகத்தரகள் பதவிகளினை நிரப்புவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டு 2024 முதலாம் காலாண்டில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. அத்துடன், எஞ்சியுள்ள வெற்றிடங்களினை நிரப்புவதற்கு அமைச்சின் செயலாளரிடம் ஏற்கனவே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | பேரவையின் நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கு போதுமான பணியாளர்களினை நியமிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. வகைகூறல் மற்றும் நல்லாளுகை

### 4.1 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 16 மீண்டெழும் செலவு விடயங்கள் தொடர்பாக பாதீட்டு கிரயம் மற்றும் உண்மைக் கிரயம் என்பவற்றுக்கிடையில் 35 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான விலகல்கள் காணப்பட்டதனால் பயனுறுதியான கட்டுப்பாடாக பாதிடல் பயன்படுத்தப்படவில்லை. | எதிர்பாராதவிதமாக ஊழியர் புரள்வு, அரச செலவு முகாமைத்துவ சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய வெளியக காரணிகளின் தாக்கத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. | பயனுறுதிமிக்க கட்டுப்பாட்டு கருவியாக இதனை பயன்படுத்தக்கூடிய வகையில் பாதீடு கவனமாக தயாரிக்கப்பட வேண்டும். |